## 1. நுண்ணினப் பொருளியல் ஓர் அறிமுகம்

**28. பொருளியலைப் பற்றி பற்றாக்குற இலக்கணத்தை விளக்குக?***

விருப்பங்களோடும்,கிடைப்பருமையுள்ள மாற்று வழியில் பயன்படக்கூடிய சாதனங்களோடும், தொடர்புடைய மனிதன் நடவடிக்கை பற்றிய ஓர் அறிவியல்-**இலயனல் ராபின்சன்.**

**31. பணிகளின் பல்வேறு இயல்புகள் யாவை?***

1. புலனாகாப் பொருட்கள்.
2. பலதரப்பட்ட பண்டங்கள்.
3. பணிகளைப் பிரிக்க இயலாது.
4. அழியக்கூடியது.

**32. பயன்பாட்டின் முக்கிய இயல்புகள் யாவை?****

- பயன்பாடு உளவியல் சார்ந்தது.
- பயன்பாடும்,உபயோகமும் ஒன்றானவை அல்ல.
- மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது
- ஒரு உளவியல் கருத்தாகும்.

**33. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கான வேறுபாடுகள்?****

| நுண்ணியல் | பேரியல் |
|---|---|
| • தனிப்பட்ட பொருளாதார முடிவுகளை ஆராய்வது.<br>• விலை கோட்பாடு என்று அழைக்கப்படும்.<br>• தந்தை-ஆடம் ஸ்மித் | • ஒட்டுமொத்த பொருளாதார முடிவுகளை ஆராய்வது.<br>• வருவாய்க் கோட்பாடு என்று அழைக்கப்படும்.<br>• தந்தை- JM.கீன்சு |

## 2. நுகர்வுப் பகுப்பாய்வு

**28. மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக?****

- விருப்பங்கள் எண்ணற்றவை.
- விருப்பங்கள் நிறைவேறக் கூடியவை.
- விருப்பங்கள் பழக்க வழக்கமாக மாறும்.
- விருப்பங்கள் போட்டியிடுபவை..

**29. மொத்த பயன்பாடுக்கும் இறுதிநிலை பயன்பாட்டுக்கும் உள்ள உறவு?***

| மொத்த பயன்பாடு: | இறுதிநிலை பயன்பாடு: |
|---|---|
| • அதிகரிக்கும்.<br>• உச்சம்.<br>• குறைய தொடங்கும். | • குறையும்.<br>• பூஜ்ஜியம்.<br>• எதிர்மறையாகும். |

**30. நுகர்வோர் எச்சத்திற்கு மார்ஷலின் இலக்கணம்?****

- ஒரு பொருளை வாங்காமல் இருப்பதை விட,வாங்குவதே மேல் என முடிவு செய்து
- நுகர்வோர் கொடுக்க நினைத்த விலைக்கும், உண்மையில் கொடுத்த விலைக்கும் உள்ள வித்தியாசம்.

**32. தேவை விரிவு மற்றும் சுருக்கத்தை வேறுபடுத்துக?***

**தேவை விரிவு:**

குறைந்த விலையில் அதிக பொருட்களை வாங்குவது.

**தேவை சுருக்கம்:**

அதிக விலையில் குறைந்த பொருட்களை வாங்குவது.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT www.Padasalai.Net

**33. சமநோக்கு வளைக் கோட்டின் பண்புகள் யாவை?***

- கீழ் நோக்கி சரிந்து செல்லும்.
- தோற்றுவாய் நோக்கி குவிந்து காணப்படும்.
- ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளது.
- Xஅச்சையோ Yஅச்சையோ தொடாது.

## 3. உற்பத்தி பகுப்பாய்வு

**28. நிலத்தின் சிறப்பு இயல்புகள் யாவை?***

- இயற்கையின் கொடை.
- நிலத்தின் அளிப்பு மாறாது.
- முதன்மை உற்பத்தி காரணி.
- ஒரு செயலற்ற உற்பத்தி காரணி.

**29. அளிப்பு நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?***

- பொருட்களின் தன்மை.
- தொழில் நுட்ப நிலை.
- உற்பத்தி செலவு.
- கால அளவு.

**30. தொழில் முனைவரின் பணிகள் யாவை?****

- தொழிலை தொடங்குபவர்.
- புத்தாக்கம் புனைபவர்.
- உற்பத்தி காரணிகளை ஒருங்கிணைப்பவர்.
- தொழிலை மேற்பார்வையிடுபவர்.

**34. காப்- டக்ளஸ் உற்பத்தி சார்பில் விளக்குக?***

- **ALa Kb**
- **a+b=1**(மாறா விகித விளைவு விதி)
- உழைப்பு, மூலதனம் இரண்டையும் பயன்படுத்தி எவ்வளவு உற்பத்தி பெற முடியும் என்பதை விளங்குகிறது.

## 4. செலவு மற்றும் வருவாய் பற்றிய ஆய்வு.

**31. வாய்ப்புச் செலவு எடுத்துக்காட்டுகளுடன் வரையறு?***


அடுத்த சிறந்த மாறுபட்டு செலவை குறிக்கும்.(சில வாய்ப்பு இழப்பதால் ஏற்படும் செலவு)
(எ.கா) ஒரு விவசாயி தன் நிலத்தில் கரும்பு அல்லது நெல் விளைவிக்க முடியும்.
நெல்லை விளைவித்தால் நெல்லின் வாய்ப்புச் செலவு என்பது விட்டுத் தந்த கரும்பின் உற்பத்தி அளவே ஆகும்.

**32. AC மற்றும்MC எடுத்துக்காட்டுடன் வரையறு? ***

1. **AC** குறையும்போது **MC** அதற்கு கீழாக குறையும்.
2. **AC**யின் அடிமட்ட புள்ளியில்**AC=MC**சமம்.
3. **AC** அதிகரிக்கும் போது,**MC** அதைவிட வேகமாக அதிகரிக்கும்.

**34. நீண்டகால செலவு வளைக்கோட்டை வரைபடத்தின் விளக்குக?**

- நீண்ட காலத்தில் அனைத்து காரணிகளும் மாறக்கூடியது.
- பல்வேறு குறுகிய கால சராசரி செலவு கோட்டை உள்ளடக்கியது.
- **LAC=**LTC/Q
- திட்ட,உறை வடிவ வளைகோடு என்று அழைக்கப்படுகிறது.



## 5. அங்காடி அமைப்பும் விலை நிர்ணயமும்.

**28. அங்காடியின் இயல்புகள் யாவை?**

1. வாங்குபவர்,விற்பவர் இருக்க வேண்டும்.
2. பொருள்(பண்டங்கள்)இருக்க வேண்டும்.
3. பண்டங்களுக்கான விலை இருக்க வேண்டும்.

**31. விற்பனைச் செலவு என்றால் என்ன?எடுத்துக்காட்டுடன் விளக்குக?***

முற்றுரிமை போட்டியில் நிறுவனங்கள் தன் பண்ட விற்பனைக்காக மேற்கொள்ளப்படும் செலவுகளை குறிக்கும்.

(எ.கா) விளம்பரங்கள்.

**33. நிறுவன மற்றும் தொழிற்சாலைக்கும் இடையே உள்ள வேறுபாடுகள்?***

**நிறுவனம்:**

- தொழிலின் ஒற்றை உற்பத்தி அலகாகும்.
- விலையை நிர்ணயத்தை, லாபம் ஈட்டுவது.

**தொழில்:**

- பல நிறுவனங்களின் தொகுப்பை குறிக்கும்.
- (உ.தா) சிமெண்ட் தொழிற்சாலை.

**34. இருவர் முற்றுரிமையின் இயல்புகள் யாவை?***

- இரண்டு விற்பனையாளரும் அங்காடியை முழுமையாக அறிந்திருப்பார்.
- இரு விற்பனையாளரும் உடன்பாடு செய்திருப்பர்.
- பண்ட வேறுபாடு இல்லை.

## 6. பகிர்வு பற்றிய ஆய்வு

**28. பணத்தை வைக்காத நோக்கங்கள் யாவை?***

1. பரிமாற்ற நோக்கம்.
2. முன்னெச்சரிக்கை நோக்கம்.
3. ஊக நோக்கம்.

**29. கூலியின் வகைகளை பட்டியலிடுக?**

பணக்கூலி, உண்மைக்கூலி, துண்டுக்கூலி, நேரக் கூலி.

**30. வாரம் மற்றும் போலி வாரம் வேறுபடுத்துக?****

| வாரம் | போலி வாரம் |
|---|---|
| • குத்தகைக்காரர் நிலச் சொந்தக்காரருக்கு வழங்கும் ஒரு பகுதி தொகையாகும்.<br>• இது விலையில் சேரும். | • மனிதனால் உருவாக்கப்பட்ட இயந்திரங்களுக்கு வழங்கப்படுகிறது.<br>• இது விலையில் சேராது. |

**31. பிழைப்பு மட்ட கூலிக் கோட்பாட்டை சுருக்கமாக விவரி?**

- ரிக்கார்டோ கோட்பாட்டை கூறியவர்.
- உழைப்பாளியின் அடிப்படைத் தேவைகளின் அளவிற்கு சமமான கூலி வழங்கப்பட வேண்டும்.

**33. புத்தாக்க இலாபக் கோட்பாட்டை சுருக்கமாக கூறுக?***

- ஜோசப் A.சும்பீட்டர் இக்கோட்பாட்டை கூறினார்.
- புத்தாக்கம் புனைவதற்கான வெகுமதிய லாபம்.
- புதிய பண்டம், புதிய மூலப்பொருட்கள், புதிய உற்பத்தி முறைகளை கண்டறிதல்.

A. AYYAPPAN., M.A., B.Ed., PG ASST (ECONOMICS) GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT www.Padasalai.Net

**34. இடர் தாங்கும் லாபக் கோட்பாடு குறிப்பு வரைக?***

- F.B. **ஹேறாலே** (1907) கோட்பாட்டை கூறினார்.
- வணிகத்தில் இடர்களை எதிர்கொள்வதற்கான வெகுமதியே லாபம்.
- அதிகம் லாபம், இடர்கள் அதிகமாக இருக்கும்.

## 7. இந்திய பொருளாதாரம்.

**29. வேளாண்மை பொருளாதாரம் பற்றிய அம்பேத்கரின் பொருளாதார கருத்துக்களை கூறுக?***

- 1918 -ல் இந்தியாவில் "குறைந்த நில உடைமை மற்றும் தீர்வுகள்" நூலை எழுதினார்.
- நில உடமை ஒருங்கிணைப்பு மற்றும் விரிவாக்கம் பற்றிய வேறுபாட்டை கூறுகிறார்.

**30. கிராம சர்வோதயா சிறு குறிப்பு வரைக?***

- கிராம முன்னேற்றத்தைப் பற்றிய காந்தியடிகளின் கருத்தாகும்.
- தன்னிறைவு,சுயசார்பு பெற்ற கிராமங்களாக இருக்க வேண்டும்.
- உண்மையான இந்தியா வாழ்வது கிராமங்களில் என்கிறார்.

**31. இந்திய திட்டமிடுதலில் நேருவின் அணுகுமுறை எழுதுக?**

- நேரு திட்டமிடுதல் அறிமுகப்படுத்தினார்.
- நம் நாடு முன்னேற ஒருங்கிணைந்த திட்டம் அவசியம் என்றார்.
- மனித சக்தி,வளங்கள்,பணம் இவற்றை சிறந்த வழியில் பயன்படுத்துவதை குறிப்பது திட்டங்கள்.

**33. நல பொருளாதாரம் பற்றி அமர்த்தியா சென்னின் கருத்துகளை எழுதுக?**

- **1998**ல் நோபல் பரிசு பெற்றவர்.
- வருமான பகிர்வானது, வறுமைக்கோட்டிற்கு கீழே உள்ள மக்களின் நுகர்வுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கிறார்.

**34. சமூக கட்டமைப்புகளை விளக்குக?**

- மனித முன்னேற்றத்திற்கும்,பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் அனைத்து காரணிகளும் அடங்கும்.
- கல்வி நிறுவனங்கள், மருத்துவமனைகள், போக்குவரத்து பொதுவசதி போன்றவைகள்.

## 8. இந்திய பொருளாதாரம் விடுதலைக்கு முன்னரும் பின்னரும்.

**30. காலணி ஆதிகத்தின்போது இந்தியாவில் நடைமுறையில் இருந்த நில உடமை முறைகளை பற்றி தெளிவுபடுத்துக?***

1. ஜமீன்தாரி முறை-1793(காரன்வாலிஸ்).
2. மஹல்வாரி முறை-பெண்டிங் பிரபு.
3. ரயத்துவாரி முறை-சார் தாமஸ் மன்றோ.

**31. வணிக வங்கிகள் நாட்டுடமையாக்கப்பட்டதற்கான காரணங்கள்?***

- சமூகநலத்தை அடைவதற்கு.
- வேளாண்மை ,சிறு, நடுத்தர, பெரிய தொழில்களை விரிவு படுத்துவதற்கு.
- வங்கிகளில் தனியார் முற்றுரிமையை கட்டுப்படுத்த.

**32.1991 ஆம் ஆண்டின் தொழில் கொள்கை ஏதேனும் மூன்று நோக்கங்களை குறிப்பிடுக?**

- தொழில் துறையில் போட்டியை ஊக்குவித்தல்.
- தனியார் நிறுவனம் செயல்பாடுகளை அதிகரிக்க செய்தல்.
- வேலைவாய்ப்பு, உற்பத்தி,பன்னாட்டுளவில் முன்னேற்றம் அடைய.

A. AYYAPPAN M.A., B.Ed., PG ASST (ECONOMICS) WWW.Padasalai.Net RANIPET DISTRICT

**33. பன்னிரண்டாம் ஐந்தாண்டு திட்டம் பற்றி குறிப்பு வரைக?**
- (2012-2017) இதன் திட்ட காலம்.
- விரைவான உள்ளடக்கிய நிலையான வளர்ச்சியை இதன் நோக்கமாகும்.
- 8% இலக்கு.

**34. PQLI என்றால் என்ன?***
- செய்திறன் குறியீட்டு எண்.
- மோரிஸ் டி மோரிஸ் உருவாக்கினார்.
- ஆயுட்காலம், குழந்தை இறப்பு விதம், எழுத்தறிவு உள்ளடக்கியது.

## 9. இந்தியாவின் மேம்பாடு அனுபவங்கள்.

**29. உலகமயமாக்கல் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விவரி?**
- இந்திய பொருளாதாரத்தை உலக பொருளாதாரத்துடன் இணைத்தல்.
- சுங்க வரி குறைப்பு எளிமையாக்குதல்.
- வெளிநாட்டு நேரடி முதலீட்டை அனுமதித்தல்.

**31. குளிர் பதனக்கிடங்கு பற்றி விவரிக்க?**
- விரைவில் அழுகும் தன்மை உடைய பழங்கள் மற்றும் காய்கறிகளை குளிர் பதன கிடங்கு ஏற்படுத்தி சந்தைப்படுத்துவது.
- 1964 ஆம் ஆண்டு குளிர்பதன கிடங்கு ஆணை ஏற்படுத்தப்பட்டது.

**32. வேளாண் உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகளை கூறுக?**
- தனியார்,பொது கூட்டுறவு வளர்ச்சி பெற செய்தல்.
- சந்தையின் விரிவாக்க பணியினை விவசாயிகளுக்கு வழங்குதல்.
- வேளாண்மை நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.

**33. புதிய வணிகக் கொள்கையின் சாராம்சத்தை விளக்குக?**
- ஏற்றுமதி 25%சதவீதம் குறைத்தல், "இந்திய தயாரிப்புகளை" ஊக்கிவித்தல்.
- டிஜிட்டல் இந்தியா முறைப்படி, மின்னணு முறையில் கையொப்பமிட்ட ஆவணங்களை தயாரித்தல்.
- 2020க்குள் ஏற்றுமதி,இறக்குமதி இரு மடங்காக அதிகரிக்கப்படுதுதல்.

**34. GST என்றால் என்ன? நன்மைகளை எழுதுக?****
- 2017ம் ஆண்டு ஜூலை 1, பண்டங்கள் பணிகள் மீது விதிக்கப்படும் வரியாகும்.

  **நன்மைகள்:**
- அடுக்கு வரி முறை நீக்கியது.
- ஒரு முனை வரியாக உள்ளது.
- மின்னணு வணிகம், இணைய வழி வசதி எளிமை படுத்தப்பட்டுள்ளது.

## 10. ஊரக பொருளாதாரம்.

**31. ஊரக மேம்பாட்டின் முக்கியத்துவம்?**
- கிராம முன்னேற்றம் இன்றி நாட்டின் முன்னேற்றம் அமையாது.
- நகர்ப்புறத்துக்கு தேவையான குடிநீர், பால், உணவுகள் கிராமப்புறத்தில் இருந்து அளிக்கப்படுகின்றன.
- வேலைவாய்ப்புகள், ஒட்டுமொத்த உணவு உற்பத்தி பொருக்க இயலும்.

**33. ஊரக வறுமை நீக்குவதற்கான வழிமுறைகள்?**
- வேலைவாய்ப்பு உருவாக்குதல், வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மூலம் போக்கலாம்.
- 20 அம்ச திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி திட்டம், வேலைக்கு உணவு திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டம், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித்திட்டம்.

A. AYYAPPAN, M.A., B.Ed., PG ASST IN ECONOMICS, GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT
www.Padasalai.Net

35. **மண்டல ஊரக வங்கி பற்றி குறிப்பு வரைக?**
- ***1975**ல் வட்டார ஊரக வங்கிகள் செயல்படுத்தப்பட்டன.(64 வங்கி உள்ளன)
- *சிறு விவசாயிகள்,கிராம கைவினைஞர்கள், சிறு நிறுவனங்கள் கடன் பிற உதவிகள் வழங்குவதன் மூலம் ஊரகம் மேம்பாடு அடையும் என வங்கிகள் பரிந்துரைக்கப்பட்டன.
- *பொருளாதாரத்தில் நலிவடைந்தோருக்கு மட்டுமே **RRBs** கடன் வழங்குகிறது.

36. SHG **யின் பண்புகளை கூறுக?**
- ஒரே மாதிரியான பொருளாதார நிலை உள்ளவர்களிடையே சுய உதவி குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
- 10 முதல் 20 பெண் உறுப்பினர்கள் கொண்ட சுய உதவி குழுக்கள்.
- சேமிப்பு மற்றும் கடன் பெறுதல், கூட்டம், பதிவேடு பராமரித்தல் பணியினை செய்கின்றன.

37. MUDRA **வங்கியின் நோக்கங்களை பட்டியலிடுக?**
- குறுங்கடன் வாங்குபவர், பெறுபவரை ஒழுங்குபடுத்துதல்.
- சிறு நிறுவனங்களுக்கு நிதி வசதி ஏற்படுத்தி தருதல்.
- கடன் உத்திரவாத திட்டம் ஆரம்பித்தல்.
- தொழில்நுட்ப உதவிகளை அளித்தல்.

## 11. தமிழ்நாட்டு பொருளாதாரம்.

28. **தமிழ்நாட்டின் கனிம வளங்கள் குறிப்பு வரைக?**
- டைட்டானியம், கிரானைட், பாக்சைட் சுரங்கத் திட்டங்கள் தமிழ்நாட்டில் உள்ளன.
- சேலம்-மாங்கனிசு, ஏற்காடு-பாக்சைட், கஞ்சமலை-இரும்புத்தாது.
- இந்தியாவில் மதுரையில் மட்டுமே-மாலிப்டினம் கிடைக்கிறது.
- கரடிக்குட்டம் என்னும் ஊரில் மட்டுமே கிடைக்கிறது.

29. **தமிழ் நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை** (GSDP) **விளக்குக.**
- மாநில உள்நாட்டு உற்பத்தியானது 2016-17 நிதியாண்டில் 207.8 பில்லியன் டாலராக உள்ளது.
- நம் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தியானது உலக அளவில் குவைத் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு சமமாகவும்,
- வாங்கும் சக்தியின் அடிப்படையில் ஐக்கிய அரமிபு எமிரேட் நாடுகளின் UAE மொத்த உள்நாட்டு உற்பத்தி சமமாக உள்ளது.

33. **தமிழ்நாட்டிலுள்ள புதுப்பிக்கத்தக்க ஆற்றல் வளங்கள் யாவை?***
- தமிழ்நாடு பிற மாநிலங்களை விட முன்னனியில் உள்ளது.
- கிராமமக்களுக்கு தேவையான மின்சாரத்தை வழங்கும் ஒரு புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமாக உள்ளது.
- இது இந்தியாவின் 2% மின் தேவைகளை நிறைவு செய்கிறது.
- இது இந்தியாவின் காற்றாலை உற்பத்தியில் பாதியளவு ஆகும்.

34. **உடல்நலத் துறையில் தமிழ்நாட்டின் செயல்திறனை விளக்குக?**
- தமிழ்நாட்டின் சுகாதாரக் குறியீடானது கேரளம், பஞ்சாப் மாநிலங்களுக்கு அடுத்து
- மூன்றாவது இடத்தில் உள்ளது.
- தமிழகத்தில் பச்சிளங்குழந்தை இறப்பு வீதம் 14 ஆகும். இது பிற மாநிலங்களைக் காட்டிலும் மிகக்குறைவு.

A. AYYAPPAN , M.A., B.Ed.,
PG ASST ( ECONOMICS )
GBHSS, WALAJAPET, RANIPET DISTRICT